**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 191of 2019 |

Depositions of PW -4 witness for ________ { Prosecution / Defence / Court

Name : வையம்மாள்

Father's Name : க/பெ. பாபுரெட்டி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of January** 2026.

**(எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

<u>அரசு தரப்பில் முதல்விசாரணை</u>

1. நான் தூத்துக்குடி மாவட்டம் உப்பலாபுரத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். நான் எனது மகள் ரூபா லட்சுமி அவர்களை கோவை மாவட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தேன். கடந்த 15 ம் தேதி ஏப்ரல் மாதம் 2019 ஆம் ஆண்டு (சாட்சி மாதம் மாற்றித்தான் கூறினார்) காலை சுமார் 07.15 மணியளவில் பால் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்த பொழுது இருசக்கர வாகனத்தில் வந்த ஒரு நபர் நான் கழுத்தில் அணிந்திருந்த சுமார் நான்கு பவுன் எடையுள்ள தங்கச் செயினை அறுத்துக் கொண்டு சென்று விட்டார். நான் சத்தம் போட்டவுடன் எனது மருமகன் மற்றும் மகள் அருகில் இருந்தவர்களும் எதிரியை பிடிக்க முயற்சி செய்தார்கள். ஆனால் எதிரியை பிடிக்க முடியவில்லை.

2. ஆகவே எனது செயினை அறுத்துக் கொண்டு சென்ற நபர் மீது நடவடிக்கை எடுக்கும்படி எனது மருமகன் கிருஷ்ணன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். பின்னர் போலீசார் எனது

செயினை கண்டுபிடித்து விட்டதாக தெரிவித்தார்கள். நானும் செயினை அடையாளம் காண்பித்தேன். நீதிமன்றத்தில் மனு செய்து எனது செயினை பெற்றுக் கொண்டேன். புகைப்படத்தில் உள்ள செயின் என்னிடம் கொடுத்தார்கள். ஆனால் நான் அணிந்திருந்து திருடு போன செயின் அது அல்ல. போலீசார் என்னை விசாரித்தார்கள். எனது செயினை அறுத்துக் கொண்டு சென்ற நபரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட இயலும். (எதிரி நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதி கோரப்பட்டு சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

புகைப்படத்தில் உள்ள செயின் தான் நான் சம்பவத்தின் பொழுது அணிந்திருந்தேன் என்றும் வயது முதிர்வின் காரணமாக தற்பொழுது மறந்து மேற்படி செயின் என்னுடையது அல்ல என சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பால் வாங்கிக் கொண்டு வந்து கொண்டிருந்த இடத்திற்கும் எனது மகள் வீட்டிற்கும் சுமார் 20 அடிக்குள் இருக்கும். எனது மகள் சம்பவத்தின் பொழுது குடியிருந்த வீட்டிற்கும் சூலூர் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என எனக்கு தெரியாது. சம்பவம் குறித்து எனது மருமகனுக்கு எப்பொழுது தகவல் சொன்னேன் என்றால் நான் சத்தம் போட்டவுடன் மருமகனும் சம்பவ இடம் வந்து விட்டார். புகார் காவல் நிலையத்தில் எந்த தினத்தன்று கொடுத்தேன் என்றால் அன்றைய தினமே கொடுத்தோம். வண்டியின் நிறம் மற்றும் பதிவு எண் மற்றும் வண்டியின் model தெரியுமா என்றால் பதிவு எண் மற்றும் model தெரியாது. கருப்பு நிற வண்டி ஆகும். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும் அவ்வாறு நடந்திருந்தால் அன்றைய தினமே புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.01.12 18:44:32 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**